VI. சத. 1
1023
(8744)

ஸ்ரீராமஜயம்.

கோபாலகிருஷ்ணதாசர்

செய்தருளிய

# எம்பிரான் சதகம்

மூலபாடம்.

---

[illegible]

[illegible]

[illegible]

அனுமதிப்படி

இம்மாநகர்

சென்னை

ஊ. புஷ்பரதசெட்டியாரால்

கலாரத்நாகரம்

என்னும் தமது அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1891.

[illegible]

உ. வே. சாமிநாத[illegible]

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

ஸ்ரீராமஜயம்.

# எம்பிரான் சதகம்.

## பாயிரம்.

### காப்பு.

என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமான்
என்று மெனக்கே பிரானுவான்—என்றும்
பிறவாத பேருளன் பேரா யிரமும்
மறவாது வாழ்த்துகவென் வாய்.

ஆழ்வார்கள் பன்னிருவர் பாடல் போற்றும்
அரிபத்தன் கோபால கிருஷ்ண னன்பால்
கேள்வியாற் றனதறிவின் மிகுதி யாலுங்
கிருபைகூர் குருகடா க்ஷத்தி னாலும்
தாழ்வில்லா வெம்பிரான் சதகம் தன்னைச்
சாற்றினன் போற்றியன்ப ரோத்தும் வண்ணம்
கேள்வியா லனுதினமுங் கீர்த்திப் பார்கள்
கிளர்விஷ்ணு வைகுந்தத் துளராய் வாழ்வார். (க)

பிடிபடா மறைபடித்து வேத மார்க்கப்
பிரதிஷ்டா பனுசார்ய ருபதே சத்தை
அடைவுடனே யெழுபத்து நால்வர்க் கீந்தே
அவர்கள்சிங்கா தனக்குருக்க ளாக வைத்தோர்
உடையவரெம் பெருமானுர் பாஷ்ய காரர்
உயர்பூதூர் வள்ளலார் நினைந்தோர்க் கெல்லாம்
இடரறுக்கு மெதிராசர் விப்பிர தங்கர்
எங்களிரா மாநுசர்தா ளிறைஞ்சு வோமே. (உ)

கிம்புருடர் கருடர்காந் தருவர் சித்தர்
கின்னரர்வித் தியாதரர்சங் கீதம் பாடத்
தும்புருநா ரதர்சனகா திபர்நற் சேடன்
சுரருடனே ரிஷிமுனிவர் பலரும் போற்ற
அம்புயனுன் மறையோத வீற்றி ருக்கும்
அச்சுதனே யுனக்கென்றன் புன்சொல் லாலே
எம்பிரான் சதகமென விருத்தத் தாலே
இசைப்பதற்கே முன்னிற்பா யெம்பி ரானே. (௩)

பாயிர முற்றிற்று.

---

## நூல்.

திருமாது வீற்றிருக்குங் கமல மார்பா
திகிரிசங்கந் தரித்தருளுஞ் செய்ய கையா
கருமாணிக் கக்கிரிபோ னிறத்த மெய்யா
கதிரிரவி மதியிரண்டுங் கண்ணுங் கண்ணு
அருமாம றைப்பொருளா மாதி தேவா
அனைத்துலகும் படைத்தளித்திட் டழிக்கு மையா
இருபாத மலர்போற்ற மெய்யர் நெஞ்சில்
இருத்திநா ராயணனே யெம்பி ரானே. (௧)

மாதவனீ திருமங்கைக் குபதே சித்த
மந்திரஞ்சே னைபதிமெய்ச் சடகோ பன்சீர்
நாதமுனி யுடனுய்யக் கொண்டார் மிக்க
ஞானமணக் கானம்பி யாள வந்தார்
நீதிபுனே பெரியநம்பி யுலகம் போற்றும்
நிகரிலிரா மாநுசனல் லுபதே சம்பெற்
றேதமற வெழுபத்து நாலு பேருக்
கெதிராச னுரைக்கவைத்தா யெம்பி ரானே. (௨)

பூதலத்தி லுண்டான தலங்க டம்மில்
புண்ணியகோ டித்தலமொன் ருய்ந்து பார்த்தே
வேதநெறி யாலாதிப் பிரமன் ருனும்
மிக்கதிருக் கச்சியில்வந் திறங்கி யுற்றே
ஆதரவா யத்திகிரித் தலத்தி லோமம்
அன்றவன்றன் பண்ணவந்த வோம குண்டத்
தேதமற வந்துதித்தே வரங்க ளீந்தாய்
எண்ணரிய வருளாளா வெம்பி ரானே. (௩)

உன்னுடைய வுடன்மயமே பூமி யெல்லாம்
உனதுசெவ்வாய் நீர்மயமே யுதக மெல்லாம்
மின்னியநின் கண்மயமே தேயு வெல்லாம்
வீறியநின் சுவாசமய மேகாற் றெல்லாம்
நின்நினைவின் மயமேயா காய மெல்லாம்
நின்மூர்த்தி மயமுயிர்க ளுணர்வி லெல்லாம்
என்னுடலோ டுயிர்செய்கை யெல்லா நீயே
இரண்டுபண்ணி யலைப்பதென்னே வெம்பி ரானே.

அருளாளா வேகவதி நதிசூழ் கச்சி
அத்திகிரி நாதாவே தாக மத்தின்
பொருளாநா ராயணனே வாசு தேவா
புண்ணியகோ டிக்கிறைவா தேவ ராசா
மருளான விரணியன்றன் குறித்த தூணில்
வந்துதித்த நரசிங்கா வரத ராசா
இருளான தனுகாம னின்றுள் போற்றி
ஈடேற நினைவளிப்பா யெம்பி ரானே. (௫)

பண்ணியிடும் பணிபலவே பொன்னென் றேயாம்
பாண்டத்தின் பேர்பலவே மண்ணென் றேயாம்
வண்ணமிகும் பசுபலவே பாலொன் றேயாம்
வகையேழி னுடல்பலவே சீவ னென்றும்

நண்ணுமறு சமயங்கள் பேர்வே றல்லால்
  நாதனீ யொருவனே யவர்க ளம்மை
எண்ணியே செயுந்தொண்டர் பூசைக் கெல்லாம்
  இரங்கிவரந் தருகின்ற யெம்பி ரானே. (௬)

கேசவநா ராயணமா தவகோ விந்த
  கிளர்விஷ்ணு மதுசூத கேடி லாத
நேசதிரி விக்கிரமனே வாம னுசீர்
  நிறைந்தருளுஞ் சிதரா விருடி கேசா
மாசிலெழில் சேர்பதும நாபா வெங்கும்
  வளர்தாமோ தரவெனும்பேர் பன்னி ரண்டிற்
கிசனு யெண்டிசையுள் புறம்பு கீழ்மேல்
  இவையிரா றிடத்துறைவா யெம்பி ரானே. (௭)

சங்கரஷ ணுவாசு தேவா முத்தி
  தரும்பிரத்தி யும்மனு வனிருத் தாசி!
துங்கபுரு டோத்தமனே யதோட்ச சாவெஞ்
  சுடர்நார சிங்கவெழி லச்சு தாநீள்
அங்கசெனார்த் தனவுபேந் திரனே மிக்க
  வரிகிருஷ்ணு வென்றுதிரி சந்தி தோறும்
எங்குமுள்ள பூசுரர்கள் சந்தி பண்ண
  இருந்திநா ராயணனே யெம்பி ரானே. (௮)

அச்சுதனே மாதவனே தேவ தேவா
  ஆதிபுரு ஷோத்தமனே யரியே மாலே
பச்சைநிறக் காகுத்தா வாசு தேவா
  பரந்தாம னேமுகுந்தா பதும நாபா
நச்சரவின் மிசைநடித்த கோவிந் தாஸ்ரீ
  நாராய ணுகேச வாவென் றுன்னை
இச்சையுடன் றுதிப்பதுவே யெனக்குப் போதும்
  இதற்கிணையா யேதுமில்லை யெம்பி ரானே. (௯)

பரப்பிரம மாமாதி மூல மேநீ
  படைத்தளித்திட் டழித்துவிளை யாட வென்றே
திருத்தமுடன் பிரமாவாய்ச் சிருஷ்டித் தன்றே
  ஸ்ரீபதியாம் விஷ்ணுவா யுயிரைக் காத்து
உருத்திரனு யுயிரையெல்லாஞ் சங்க ரித்திட்
  டோருருவே மூன்றுருவாய் மூன்று மொன்றாய்
இருக்குமெழி லச்சுதநின் மகிமை சற்றும்
  இமையவர்க்குங் காணவரி தெம்பி ரானே. (கo)

சிட்டிக்கப் பிரமாவைக் கருணை யாலுன்
  திருநாபிக் கமலத்தே செனிக்கச் செய்தாய்
மட்டற்ற செனனமெல்லாங் காமந் தாலே
  வர்த்திக்க மன்மதனை மனத்திற் றந்தாய்
நெட்டுற்ற விப்புவியிற் பிறந்த வெல்லாம்
  நீறாக்க வுருத்திரனைப் பிரமனீந்தான்
இட்டத்தே யேகனு யிராதே யிங்ஙன்
  ஏன்செய்தா யச்சுதனே யெம்பி ரானே. (கக)

பலர்கூடி யிருந்தசந்தை கலைந்த தொக்கும்
  பழுத்தாலிற் பறவைகள்சேர்ந் தகன்ற தொக்கும்
நலமாகச் சூளையொன்றில் வெந்த பாண்டம்
  நாற்றிசையும் போயுடைந்து போவ தொக்கும்
சலமீதில் மிதந்திரண்டு காஷ்டங் கூடிச்
  சடக்கெனவே பிறிந்ததொக்குஞ் சமுசா ரந்தான்
இலதாகத் தெளிந்துனது திருத்தாள் போற்றி
  ஈடேற நினைவளிப்பா யெம்பி ரானே. (கஉ)

அறக்கொடிய பவமெடுத்தா லதினா றாண்டில்
  ஐம்பதுநித் திரைபோய்மற் றைம்ப தாண்டில்
சிறுக்குழந்தை பேதையொடு பால னென்றே
  திரிந்துபசி பிணிமூப்புத் துன்ப மேவிக்

கறுத்தமயிர் வெளுத்துடலங் கூனிப் பல்போய்க்
காதுகெட்டுக் கண்மூடிக் குழறிப் பேசி
இறக்கமற்றுக் கிடந்திறக்கும் பிறவி வேண்டேன்
இனிக்களையேற் றச்சுதனே யெம்பி ரானே. (௧௩)

பாதத்திற் பிரியாம லிருக்குங் கங்கை
பரமேட்டி பிறந்ததுந்திப் பதுமத் தண்பூ
தீதற்ற கௌத்துவமா மணிபூ ணாரம்
தேசுளபீ தாம்பரநீ யுடுக்குங் கூறை
வேதத்தை விரிஞ்சனுக்கு நீயோ தித்தாய்
விண்ணவர்க்குன் றிருக்கையா லமுத மீந்தாய்
ஏதுற்று நாரணனே யுனைப்பூ சிப்பேன்
இமையவர்தம் பெருமானே யெம்பி ரானே. (௧௪)

அன்னாதி யாமரியே யுனது நாமம்
ஆயிரத்திற் பலவாத லொன்றே யாதல்
பன்னாளுங் கீழ்குலத்தோ ரெண்ணி னாலும்
பாலிருக்குங் கோபாலர் பாண்ட மொப்பார்
நின்னாம மெண்ணாமற் றர்க்கம் பேசும்
நெறியில்லார் குலம்பார்ப்பா ரானக் காலும்
இன்னாத கள்ளிருக்கு நவபாண் டத்திற்
கிணையிதுசத் தியமரியே யெம்பி ரானே. (௧௫)

வளைவான பெரும்பல்லு மெரிந்த கண்ணும்
மைம்மலைபோற் காத்திரமு முடைய காலன்
அளவான பெரும்பாசங் கொண்டே யென்றன்
அங்கத்தைப் பிணமாக்கி யாவி யென்னும்
ஒளிவேறா யாதனா சரீரக் கூட்டில்
உறப்பண்ணித் தெண்டிக்கு மிடரா னாயேன்
இளையாம லிப்பொழுதே யடிமை கொள்வாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (௧௬)

அச்சுதனின் மெய்யடியா ருகந்தே யிட்ட
தணுவெனினு மகமேரு வாகக் கொள்வாய்
நிச்சயமா யுனைநம்பி யெண்ணு மூடர் [யால்
நினைந்திடிலோர் நூற்றையொன்று வுங்கொள் ளா
நச்சிமற்ற பிதிர்க்களுக்குந் தேவ ருக்கும் [ளம்
நமஸ்கரித்துப் படைத்தவெல்லா நதியின் வெள்
இச்சையுடன் சமுத்திரத்தே சேரு மாப்போல்
எல்லாங்கைக் கொள்கின்று யெம்பி ரானே.(கஎ)

தந்தைதாய் தினும்பண்டம் பிள்ளை வாயில்
தானிட்ட சேடத்தைக் கேட்டு வாங்கிச்
சிந்தைமகிழ்ந் தின்பமுறத் தின்னு மாப்போல்
தேவாவுன் னுடைமையைநீ யடியார்க் கீய
அந்தவுன்றன் மெய்யடியார் பத்தி யாலே
அளித்தகூ ழமுதினையுண் டேப்ப மிட்டே
இந்திரைக்கு மிதுதிட்டங் காட்டித் தொண்டர்
ஏற்றமதைத் தெளியவைத்தா யெம்பி ரானே. ()

மன்னவராய் வாழ்ந்துசுகித் திருந்த பேரை
வறுமையராய்ச் சலித்திரந்து திரிய வைப்பாய்
அன்னமரி தாயிரந்து திரிந்த பேரை
அதிகராய் வாழ்ந்துசுகித் திருக்க வைப்பாய்
நின்னருளே யல்லாமல் யாவ ருக்கும்
நினைத்தபடி நேரெண்ணு தாகை யாலே
தென்னதிரு விளையாட்டுன் மகிமை சற்றும்
இமையவர்க்குங் காணவரி தெம்பி ரானே. (கசு)

அருளுடன்மீன் பார்த்தகாற் சினைதான் குஞ்சாம்
ஆமைமுட்டை தாய்நினைந்தாற் குட்டி யாகும்
பரிசத்தாற் பறவைமுட்டை குஞ்சு தாகும்
படியிவை யிற்கடையாக் கிடக்கு நாயேன்

கருணையினாற் குருமூர்த்தி பார்த்த தாலும்
கருத்தாரத் திருவுளத்தே நினைத்த தாலும்
இருபதத்தைத் தலையில்வைத்த பரிசத் தாலும்
இருளறுத்தே னச்சுதனே யெம்பி ரானே. (௨௰)

சக்கரஞ்சங் கிருபுயத்திற் பொறித்த பின்பு
தயவுடனே பன்னிரண்டு திருமண் சாத்திச்
சிக்கெனவே தாசனென்று நற்பே ரிட்டுச்
செவிகுளிர மந்திரமு முபதே சித்து
அக்கினியிற் செந்துளவக் காஷ்டங் கூட்டி
ஆவினெய்யாற் புனர்செனன வோமம் பண்ணி
இக்கிரியை யைந்தினாற் றிருத்திக் காக்கைக்
கெழிற்குருவா யுதித்தனையே யெம்பி ரானே. ()

மணியிசைக்கா வந்திடுமான் செவியான் மாயும்
மகிழ்புணர்ச்சிக் காகவிப மண்ணிற் சிக்கும் [ம்
கணில்விளக்கைக் கண்டுவிட்டில் வீழ்ந்து பொன்று
கடுந்தூண்டிற் கவ்விமச்சம் வாயான் மாளும்
அணுகியளி நாசியிற்சென் பகமோந் தெய்க்கும்
ஐம்பொறியு முடையநா னலைந்தி டாமல்
இணையிலுப தேசத்தாற் றிருத்திக் காக்கைக்
கெழிற்குருவா யுதித்தனையே யெம்பி ரானே. ()

ஆகார நித்திரைமை துனம்ப யந்தான்
அனைத்துயிர்க்கு முண்டுநரர்க் கதிகம் ஞானம்
சேகாரு நல்வினைதீ வினையி ரண்டால்
சிற்றின்பம் பேரின்பஞ் சேர்ந்தி டாமல்
நாகாரி வாகனனே கேச வாநின்
நற்பதங்கண் டடேறக் குருவு ரைக்கும்
ஏகாந்த வுபதேசப் பொருளை நம்பி
எண்ணமெய்ஞ்ஞா னந்தருவா யெம்பி ரானே. ()

பெருத்திருந்த பூசினிப்பூ வின்கீழ்க் கொட்டை
பெருத்துயர்ந்து காயாப்பூத் தேய்ந்துற் றாற்போல்
கருத்திலுறு நல்லறிவை வீறொட் டாமல்
கபடமுறும் புல்லறிவு மேலிட் டந்நாள்
குருப்பகரு முபதேசப் பொருளை நம்பக்
குறைவறவே யுருவேறத் திருவு மேறி
இருட்பறந்து மெய்ஞ்ஞானம் விளங்கச் செய்தாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (௨௪)

உப்புததி தேனுததி கருப்பஞ் சாற்றின்
உததிநெய்யி னுததிதயி ருததி யுமன்றன்
வைப்பெனும்பா லுததிநன்னீ ருததி யென்னும்
வளைகடலே ழுண்டாக்கித் தீவுண் டாக்கிக்
கப்பலுடன் சோங்குமரக் கலமுண் டாக்கிக்
கடலோடிக் கறையேறக் கற்பித் தாற்போல்
இப்பிறவிக் கடலேழுங் கடந்தே நுய்கைக்
கெழிற்குருவா யுதித்தனையே யெம்பி ரானே. ()

சீராமா வென்றொருகா லுரைத்தா லுன்றன்
திருநாம மாயிரத்துக் கிணையா மென்றே
நீராருஞ் சடையான்பா கத்து மைக்கு [போ
நிகழ்த்திடலம் மந்திரத்துக் கிணையொன் றுண்
பாராரு மதுதனையுச் சரித்தீ டேறப்
பத்துருவில் ராமனென்றே முக்கால் வந்த
ஏராரும் பரசுரா மாஸ்ரீ ராமா
எழிற்பலபத் திரராமா வெம்பி ரானே. (௨௬)

சீரரியே நின்கோவிற் றுவார பாலர்
செயவிசய ரிருவருநின் னேவ லாகும்
காரணத்தா லிரணியனே டிரணி யாட்சன்
கடியரா வணனுடனே கும்ப கர்ணன்

மாரிஷிகர் சிசுபால னுடனே தந்த
வக்கிரனு மாகமுக்கால் வதைத்து மீண்டும்
ஈரமுடன் பண்டையிலுஞ் சாரூ பந்தந்
தேற்றமுற வைத்தனையே யெம்பி ரானே. (உஎ)

கரியுன்னி மூலமே யென்ற மட்டிற் [தாய்
கராவைவதைத் தொருநொடியிற் கரியைக் காத்
உரிகின்ற துகில்வளரக் கிருஷ்ணு வென்றே
உரைத்தளவிற் றுரௌபதைக்கு மானங் காத்தாய்
அரியெங்கு முளனென்றோர் பாலன் சொல்ல
அக்கணத்திற் றூணினர சிங்க மாகி
எரிகின்ற பெருந்தணலை யவனுக் கன்றே
இமசலமாக் கினையரியே யெம்பி ரானே. (உஅ)

திருமணிட்டு நீறுமிட்டுத் திகழ்வை தீகச்
சீர்பெரிய வயிட்டிணவர் சைவர் புத்தர்
அருகர்சம ணர்கள்துருக்கர் கர்த்தா வுண்டென்
றறுசமயத் தோர்களுக்கு மிறைவனீயே
தருமநெறி பதிவிரத மறையொ ழுக்கம்
தயவுசமஞ் சத்தியஞ்சூ ளுடைய பேர்க்கு
இருளறுத்து மெய்ஞ்ஞானம் விளங்கச் செய்வாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (உகூ)

திருக்கச்சி நம்பியுனை நம்பிச் செம்பொற்
திருவால வட்டகயிங் கரியஞ் செய்து
பெருக்கமகிழ்ந் தேதிருவாய் மலர்ந்து பேசிப்
பேதமற்றுத் திட்டமா யிருக்க வோர்நாள்
கருக்கலினி லருளாளன் மறைவிற் றூங்கக்
காணும லருளாளா வென்ன நீவந்
திரக்கமுடன் கைவிளக்குப் பிடித்துச் சென்றாய்
இயல்சக்க ராயுதனே யெம்பி ரானே. (௩௦)

திறத்தபொய்கை யார்பூதத் தார்பே யாழ்வார்
திருமழிசை யார்வில்லி புத்தூ ராழ்வார்
அறிக்கைமிகுங் குலசேக ராழ்வார் ஞான
ஆரணத்தைத் தமிழ்செயுநம் மாழ்வார் பத்தி [ண்
குறைச்சலில்லாத் தொண்டரடிப் பொடியாழ் வார்ப
குளிர்ந்தசொல்லா லிசைபாடுந் திருப்பா ணழ்வார்
இறக்கவெட்டிப் பறித்ததிரு மங்கை யாழ்வார்
இவர்பதின்மர்க் கருளினையே யெம்பி ரானே. ()

பத்துப்பே ராழ்வார்கள் தமினம் மாழ்வார்
பாதார விந்தத்தைப் பணிந்து பாடி
முத்திபெற வருமதுர கவியாழ் வாரும்
மூதறிவா லுயர்வேதப் பொருளைக் கொண்டு
உத்தமமாம் பாமாலை யொடுபூ மாலை
உகந்துனக்குத் தருங்கோதை யாருங் கூட
இத்தலத்திற் பன்னிரண்டு பேராழ் வாரொன்
றெண்ணமுற வைத்தனையே யெம்பி ரானே. ()

அருளுடனே பொய்கையா ருறங்கப் பூதத்
தாழ்வார்வந் திருவரா யிருக்கப் பேயார்
சொரிமழையிற் போய்மூவ ராகி நிற்கச்
சொலற்கரிய நீநாலாம் பேராத் தோன்றி
கருணையுட னம்மூவர் பாடல் கேட்டுக்
கமலமலர்த் திருவடிவீ டாகப் பாலித்
திருளறவே கோவலூ ராய ஞான்
றிடைகழியி னின்றனையே யெம்பி ரானே. (௩௩)

வெயிற்காயு மாதித்தன் கனகத் தேர்க்கு
விடநாகம் வடஞ்சகடொன் றேழு வாசி
சயத்தாலா காயத்திற் றேர்ந டாத்தும்
சாரதிகா லிரண்டுமில்லா முடவ னுன்றன்

மயத்தான்மா மேருவைத்தேர் சுற்றிச் சுற்றி
மறைந்துதிப்ப தேதினமா நின்வே தத்தின்
இயற்சேரும் பிரமகற்பங் கிராண நன்னுள்
இதிற்ரேன்ற வைத்தனையே யெம்பி ரானே(௲ச)

உதித்துவரும் போதுமத்தி யானப் போதும்
உயரத்த மலைவாயிற் புகுதும் போதும்
மதத்தசுர ரருக்கனைத்தேர் நடத்தொட் டாமல்
வளைந்துபொரத் திருநாபிக் கமலம் வந்த
விதிக்கடவு ளுரைத்ததிரு மந்தி ரத்தால்
விப்பிரர்கள் யாவருமுச் சந்தி தோறும்
எதிர்த்திறைத்த நீர்க்கணையா லசுரர் கிழ்பட்
டெதிர்நடக்கப் பண்ணுகின்ற யெம்பி ரானே. ()

திண்ணமுடன் பாண்டுவுக்குச் சாப முற்றும்
திறறரும னுற்பவித்தா னென்ற மட்டில்
கண்ணில்லாத் திரிதராட் டிரன்றன் றேவி
காந்தாரி கெற்பம்விழப் புடைத்துக் கொள்ள
மண்ணிலது பொன்றுமுன் முனிவி யாசன்
வந்தெடுத்துப் பலகலசத் தடைத்து நின்பேர்
எண்ணவது நூற்றுவராய்ப் பிறக்கச் செய்தாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (௲சு)

விண்ணுலகு மண்ணுலகு மசுரர் மிஞ்சி
வேதமற்று வேள்வியற்று நீதி யற்றுண்
பெண்ணென்னுங் குலமிரண்டும் வரம்பு கெட்டுப்
பிரமாவும் படைப்பொழிந்திட் டிருந்த நாளில்
திண்ணமுடன் கெருடவா கனமீ தேறித்
திறலசுர ரனைவரையுங் கொன்று தேவர்
எண்ணவுல கீரேழும் படியப் பண்ணுய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (௲எ)

வன்னியினன் புகழ்விசுவ தேவன் சுத்த
வருணன்வயிஷ்க் காரணிய னிந்தி ரன்சீர்
நன்னெறிசேர் தேவமுனி யேக பாதன்
நமன்வாயு வுமைபிதுர்க்க டனக் குபேரன்
கொன்னமருஞ் சங்கரனூர் விதியோ னென்னும்
குறைவிலா விவர்கள்பதி னைந்து பேரும்
இன்னமுத மதிக்கலையைத் தினமொன் றாக
என்றுமுண வைத்தனையே யெம்பி ரானே. (கஅ)

முதற்பிறையா மென்னுமோர் கலையிற் கூடி
மூவைந்தும் வளர்ந்துகலை பதினா றாகும்
மதிக்கலையிற் பதினைந்தைச் சுரருண் டென்று
வந்திதனைக் கூடுமமா வாசை நாளில்
கதிர்ப்பருதி பசும்பயிர்புல் கன்ம ரத்திற்
கலந்தணைந்து பசுவிடத்தே வந்து கூடி
இதிற்பஞ்ச கவ்வியத்தால் பணுமோ மத்தால்
இந்துதிக்கப் பண்ணுகின்றா யெம்பி ரானே. (கசு)

காமனுரு விலிபுரவி கிளிதேர் காற்று
கடல்முரசங் குயில்காளஞ் சேனை மின்னார்
மாமகரங் கொடிகரும்பு சிலைநாண் வண்டு
மலர்கணைக ளிவைசொண்டே மதனய் வீறிப்
பூமியுயர் வானமெங்குஞ் சஞ்ச ரித்துப் [ட்டி
பூங்கணையெய் தாண்பெண்ணைப் பொருத்திக் கூ
ஏமநிறத் தயன்படைப்பு மிவனால் வர்த்தித்
தேற்றமுற வைத்தனையே யெம்பி ரானே. (சா0)

படடமறறுப பதனலாண டடவா யுறறுப
பத்தினியுஞ் சிறைபோய்ப்பின் ஞானு நீயும்
மட்டறவே சலித்திருக்கச் சுக்கி ரீவன்
வந்துதவக் கவித்திரளாற் சேது கட்டித்

துட்டனெனும் ராவணனைக் கொன்று தேவர்
தோத்திரிக்க வீடணற்குப் பட்டங் கட்டி
இட்டமுட னுலகாண்ட ஸ்ரீரா மாவென்
றெண்ணவிரு ளறுக்கின்ற வெம்பி ரானே. (சுக)

மீதான மச்சகெந்தி மகன்செத் தில்லாள்
வியாசமுனிக் குப்பெற்ற பாண்டு தந்தை
மாதாக்கள் குந்தியுமத் திரையென் பாளும்
மந்திரத்தா லேவருக்கை வரையும் பெற்றார்
சூதாடிப் பொய்யுரைத்துக் குருவைக் கொன்றார்
துரௌபதையே பஞ்சவர்க்குத் தேவி யானாள்
ஈதார ணப்பொருள்பா ரதமா மென்றே
எண்ணவிரு ளறுக்கின்ற வெம்பி ரானே. (சுஉ)

நண்ணியொரு பாகவதன் வறுமை தன்னால்
நாகரசன் பாற்சென்று நலிவு கூற
மண்ணிலவ னிருபதாண் டினுக்குச் செல்லும்
மனைவர்த்திக் கீந்துபின்னும் வாவென் றோதக்
கண்ணனதனாற் கானகத்திற் பதித்த வேங்கை
கண்டவனுங் கலங்கியந்தக் கலக்கந் தீர
எண்ணரியே யெனக்கேட்ட புலிக்கு முத்தி
ஈந்தனையேங் கடத்தரியே யெம்பி ரானே. (சுரு)

அறுசமயத் துறைகளுக்கு மிறைவ னீயென்
றறியாமற் பாண்டியன்முன் றர்க்கத் துற்றால்
விறலரசன் பொற்கிழியை யுயரக் கட்டி
விழப்பாடிக் கொடுபோங்கள் பெரியோ ரென்ன
மறைகளொன்று மோதறியாப் பெரியாழ் வாரை
மாமறைநீ யோதுவித்துக் கிழிய றக்கண்
டிறைவணங்கிப் பட்டர்பிரான் வந்தா னென்றே
எண்ணவிரு ளறுத்தனையே யெம்பி ரானே. (சுச)

நந்தவனங் கொத்தநிலத் தெழுந்த பெண்ணை
நம்மாழ்வார் புத்திரியா வளர்த்த நாளில்
சிந்தைமகிழ்ந் துனக்காழ்வார் கட்டி வைத்த
திருமாலை யவள்சூடி நிழல்பார்த் தீய
உன்றனக்கு மற்புதமாத் தினமுஞ் சாத்த
உகந்துசூ டிக்கொடுத்த நாச்சி யாரொன்
றிந்திரைக்கு மிதுதிட்டங் காட்டித் தொண்டர்
இருதயத்து ளிருக்கின்ற யெம்பி ரானே. (சரு)

மச்சகூர் மவராக நார சிங்க
வாமனமூ விராமபுத்த கற்கி யாம்பத்
தச்சமுன்ற னவதார மாகு மென்றே
அகிலாண்டந் தெளியவிவற் றிரண்டாம் ராமன்
கச்சமரா டக்குறுகும் பரசு ராமன்
கைச்சிலையை வாங்கியே நாரி யேறிட்
டிச்சகத்தி லெப்பொழுதும் பரசு ராமன்
இருத்துமுறை செய்திட்டா யெம்பி ரானே. (சசு)

பிறக்குமுன்னே வயிற்றுக்குட் கருவி றந்து
பிணத்தைப்பெற் றழுதுசிலர் புரள வைப்பாய்
குறுக்கப்பட் டேவயிற்றிற் பிணமா வீங்கிக்
கூற்றுவனுய்ச் சிலதாயர்க் கொல்லச் செய்வாய்
மிறுக்கமற்று மகப்பெற்று முன்னஞ் செய்த
வினைகடமை யனுபவித்திட் டிறக்கச் செய்வாய்
இறக்குமிடர் பிறக்குமிட ரிரண்டும் வேண்டேன்
இனிக்கரையேற் றச்சுதனே யெம்பி ரானே. (சஎ)

ஆவணிரோ கிணிநாளி லமர பக்ஷத்
தஷ்டமியிற் சசியுதிக்கும் வேளை தன்னில்
தேவர்தொழும் வடமதுரா புரியிற் றோன்றிச்
சிசுவடிவாய் வசுதேவன் கைமீ தேறி

MAHAMAHOPADHYAYA

நீவரிற்ச யந்திநாள் வனத்துக் காளி
நேயமுடன் கனிகடரி லுகந்து கொண்டே
யாவருக்கு மரியபதங் காளிக் கீந்தாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (சஅ)

அரிதிவச மாமேகா தசிநன் றனை
அனுஷ்டித்த ருக்குமாங் கதனைக் கண்டவ்
விரதமனுஷ் டித்தவாயி லாத பேர்கள்
மிகக்கதிசே ருமையாலே சுரர்சோ திக்க
உருவமிகு மோகினியை விடுத்த மட்டில்
உறுதியாத் தன்மகனை வெட்டுங் கூர்வாள்
இருபுயத்திற் பூந்தொடையா வைகுந் தத்தே
இனத்தோடும் வைத்தனையே யெம்பி ரானே. ()

பத்தியுடன் றுவாதசியன் றம்ப ரீஷன்
பாரணைசெய் வதுதவிர்ப்பான் றாரு வாசன்
குத்திரமா வந்தொளிக்க வுண்ண வஞ்சிக்
கோவிந்தா வென்றுனது தீர்த்தங் கொண்டான்
உத்தமமென் றெண்ணும விடுஞ்சா பத்தால்
உயர்முனியைத் துரந்தண்டத் துறவொட் டாமல்
இத்தலத்தி லம்பரீஷ நீயே காவென்
றிரந்துடையப் பண்ணினையே யெம்பி ரானே. ()

பாதகக்கண் டாகன்னெ னெனு மியக்கன்
பத்தியற்றன் பெரும்புகழைக் கேளோ மென்று
காதிரண்டிற் சத்தமிகு மணியைக் கட்டிக்
கணப்பொழுது மோயாம லசைத் திருக்கத்
தீதுநினைந் தானென்றுன் மனத்தெண் ணாமல்
சிந்தையினல் மறவாமல் தியானித் தானென்
றேதமற வவனுக்கு மவன்றம் பிக்கும்
இரங்கிமுத்தி யளித்தனையே யெம்பி ரானே. ()

கடிக்கிலிர தித்தமாங் கனியை மீளக்
　கடியாமற் கல்லேயில்வைத் துனக்கா மென்றே
படைத்துவைத்த வேடுவச்சி சபரி நெஞ்சிற்
　பரிவுகொண்டு ரகுராம வவதாரத்தில்
சடக்கெனவே முன்றின்ற கனியைத் தானே
　தக்கவிதிப் படிபடைத்த தாகவுட் கொண்
டிடுக்கணறச் சாரூபஞ் சபரிக் கீந்தன்
　றீடேற்றி விட்டனையே யெம்பி ரானே. (ருஉ)

திண்ணமுடன் கோபாலர் மனையில் வெண்ணெய்
　திருடினதைக் கண்டவர்க டுரத்தும் போது
கண்ணிலாத் ததிபாண்டன் மனையுட் புக்குக் [ள்ள
　கண்கொடுத்தோர் சாடியிற்புக் கொளித்துக் கொ
புண்ணிகராங் கண்வேண்டேன் கதிதா வல்லால்
　போகவிடே னெனச்சாடி மூடிக் கொள்ள
எண்ணரிய பரமபத மவனுக் கீந்தாய்
　இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (ருங)

மிடித்தில்லாள் பசித்தொறுக்கிற் குசேல னென்னும்
　விப்பிரன்ற னஞ்சியுன்றன் பதிக்கு வந்தால்
அடுத்தசிநே கிதன்வந்தா னென்றே சிந்தித்
　தறிந்தழைத்தென் கொடுவந்தீர் தாரு மென்றே
மடிக்கணுறு பொரியவலா மதனை வாங்கி
　மகிழ்ந்துவிர லாலள்ளி யிருகாலுட் கொண்
டிடுக்கணறச் சம்பத்து முத்தி வீடும்
　இரங்கியவற் களித்தனையே யெம்பி ரானே.(ருச)

நந்தகோ பாலனுறுந் திருவாய்ப் பாடி
　நகர்மீதிற் படையெடுத்து மண்ட லீகர்
வந்திடலப் பகைவரொல்லா மடிவ ரொன்றே
　வரங்கொடுத்துப் பின்னகரங் கட்டு வித்தாய்

அந்தவரத் தாற்கஞ்சன் வரவே யஞ்சி
அசுரர்களிற் பலரைவிடுத் துன்னைக் கொல்லைக்
கெந்தவகை தொடுத்தாலுஞ் செயித்த நேக
ராட்சதரை வதைத்தனையே யெம்பி ரானே. (ருரு)

உக்கிரசே னன்றனைப்போல் வடிவு கொண்டே
உத்தமியை யோரசுரன் வந்து கூடி
அக்கிரமாக் கஞ்சனுதித் தசுர னாகி
அரக்கரைக்கூட் டிக்கொண்டே பிதாவைத் தள்ளி
திக்கெல்லா மவனாளின் மதுரைக் கேகித்
திரளுடனே கஞ்சனைக்கொன் றவன்பி தாவை
இக்குவலை யம்புரக்கப் பண்ணி வைத்தாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (ருசு)

நின்னினைவா நித்திரையைத் துர்க்கை யாக்கி
நிகரினந்த கோபனுக்குப் பெண்ண தாக்கி
அந்நிசியி லனைவரையு மயங்கப் பண்ணி
அருளுடனே வசுதேவன் கைமீ தேறி
நன்னெறிசேர் திருவாயர் பாடி புக்கு
நந்தனுக்கு மகவான துர்க்கைப் பெண்ணை
இந்நிசியிற் றேவகியார் பெற்ற தென்றே
இனிதுரைக்கப் பணணினையே யெம்பி ரானே. ()

கடியகர்த்தா பாசுரனுஞ் சத்த மாகக்
கத்துவது கேட்டளவிற் கஞ்ச னஞ்சிப்
படையெடுத்துக் கவசந்தொட் டநேக ரோடும்
பதலமாய் வந்திடத்தே வகியார் கண்டே
திடமுடையா னல்லபெண்ணே யென்ற போதும்
சீக்கிரமாக் கல்லிலடித் திடவே யோங்க
இடியிடித்தாற் போன்மார்பி லுதைத்தே துர்க்கை
ஏகினைத் தருளினையே யெம்பி ரானே. (ருஅ)

மூலையில்விட மருத்தியுனைக் கொல்ல வெண்ணி
மோகினியாய் வந்தபூ தகியென் பாளோர்
மலையெனவீழ்ந் திடமூலையி னஞ்சும் பாலும்
வல்லுயிருந் திருப்பவள வாயா லுண்டே
கொலைசெய்ய வந்தவடன் பகையெண் ணுமல்
கொடுத்தனைசா யுச்சியவீ டென்னிற் போற்றும்
இலகியமெய்த் தொண்டருக்குக் கதிதா னீவ
தெளிதுனகருச் சீரரியே யெம்பி ரானே. (ருசு)

குறைச்சலறக் கனிக்கரிசி யள்ளி மூடிக்
குதித்துவர மோதிரத்தின் வழியாச் சிந்தி
முறத்திலிட வெறுங்கையாய்த் திகைத்து நிற்க
முகம்பார்த்துத் தின்கனியிட் டப்பா வென்னில்
நிறத்தநவ மணிகள்கனி விற்பாள் கூடை
நிறையவவ ளஞ்சிநந்த கோப னென்னும்
இறைக்குரைக்கி லுனதுசொம்மே கொடுபோ வம்மா
என்றுரைக்கப் பண்ணினையே யெம்பி ரானே. ()

மன்னனைப்பா டாமற்போ கின்றே னீயும்
வாவரியே யென்றழைத்த புலவன் பின்னே
பன்னகப்பாம் பணைசுருட்டிக் கொண்டே யேகிப்
படுத்துக்கொ ளென்றமட்டிற் படுத்துக் கொண்டா
சொன்னவண்ணஞ் செய்தபெரு மாளே யென்று [ய்
சுரர்துதிக்கக் கச்சியில்வீற் றிருக்கின் றாய்நீ
என்னுயிரு மென்னுணர்வு மெல்லா நீயே
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (சுக)

கருதலர்க்குத் தோலாத வரத்தால் வந்த
காலயவு னன்போரிற் பின்னிட் டோடி
வுரை முழையிற் றனையுறக்க மெழுப்பும் பேர்கள்
மடிவதொன்றே முசுகுந்தன் வரத்தாற் றுஞ்சும்

பரிமளிக்க விடத்தொளிக்கத் துயிலு வானைப்
பதறிநீ யென்றுதைக்கின் முசுகுந் தக்கோன்
இருகண்விழித் திடக்காலை யவுண னீறாய்
இறக்கவகை யிட்டனையே யெம்பி ரானே. (௬௨)

சயிந்தவனை யிப்பகலே கொல்வேன் றப்பில்
தழலிறப்பே னெனவிசயன் சபதங் கூறப்
பயந்தவன் பெட்டிக்கு ளுறச்சக்க ரத்தால்
பகலைமறைத் திரவாக்கித் தருமன் சேனை
மயங்கியிடச் சயிந்தவனு மொளிப்பு நீங்கி
வரவிரவைப் பகலாக்கி விசயா வெய்யென்
றியம்பியந்தச் சயிந்தவனை வதைத்துப் பார்த்தன்
இறவாமற் காத்தனையே யெம்பி ரானே. (௬௩)

மைந்தனெனுஞ் செயித்திரதன் சிரத்தை யிந்த
மண்ணில்விழச் செய்தவர்கள் மடிக வென்றே
சிந்துபதி தபசுபண்ணி யிருக்கப் பார்த்தன்
செயித்திரதன் றலையறவே யெய்த பாணம்
சந்திபண்ணுங் கையிற்சிரத்தைக் கொடுபோய் வைக்
தறையிலிட்டுச் சிந்துபதி தானே சாக [கத்
இந்தவகை தொடுத்ததனா லன்று பார்த்தன்
இறவாமற் காத்தனையே யெம்பி ரானே. (௬௪)

கன்னனெய்யுங் கடுநாகக் கணையாற் பார்த்தன்
கழுத்தறுந்து மாயாமற் றேரைத் தாழ்த்த [ம்
மின்னுமணி முடிக்கிலக்காய்க் கொடுபோய்ச் சர்ப்ப
மிகவெட்கித் தனைமீண்டுந் தொடுக்கச் சொன்னால்
உன்னருளான் முன்னாளிற் குந்தி தேவிக் [டேன்போ
குரைத்தசொற்காத் தொடுத்தகணை யினித்தொ
என்னவந்தப் பாம்புதலை யடித்துக் கொண்டே
இறக்கவகை யிட்டனையே யெம்பி ரானே. (௬௫)

இனம்பன்னீ ராயிரங்கோ தானம் பண்ணும்
திறலரசன் முன்னோநா ளீந்த வோரா
தனதுகீ தாரத்திற் சேரி லத்தை
தானுமொரு வர்க்களித்த சாபத் தாலே
மனநடுங்கிக் கிணற்றினிற்பச் சோந்தி யாகி
மயங்கியுற நீயெடுக்கச் சாப நீங்கி
இனனிறமா யுலகமெல்லாம் புரக்க வைத்தாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (௬௬)

வரத்திலர னுங்கணமும் வாசல் காக்க
மதத்தவா ணசுரன்மே னீவந் தக்கால்
உருத்திரனக் கினிவிடநீ குளிரை யேவ
உஷ்ணமுடன் குளிருமா யரனுற் றக்கால்
கரத்திரளிற் படையெடுத்தே யெதிர்த்த வாணன்
கைகளோ ராயிரத்தி லிரண்டு நையை [தாய்
இருத்திமற்றைக் கரங்களெல்லாந் துணித்துக் காத்
இலகுசக்கிரா யுதத்தரியே யெம்பி ரானே. (௬௭)

பொன்னுலகைச் செயித்தநர காசுரன்முன்
பூதலத்திற் கொடுவந்து வைக்குந் தேவ
கன்னியர்கள் பதினறு யிரம்பேர் தம்மைக் [டே
கலியாண முகுர்த்தமொன்றிற் பண்ணிக் கொண்
நன்னெறிசே ரவரவர்க்கோர் புருட ளுகி
நாடோறு மவரவர்க ளுடனே கூடி
என்னகத்தி லேயிருப்பா ரெங்கும் போகார்
என்னவுற்றாய் மாயவனே யெம்பி ரானே. (௬௮)

உருக்குமணிக் கொருபூநீ யளித்தத் தாலே
உன்னுடன்சத் தியபாமை பேசா துற்றால்
தருக்கொடுவந் துனக்களிப்பே னென்று சொல்லிச்
சயகருடன் மீதேறி வானுக் கேகி

மருக்கமழும் பாரிசா தங்கொள் போது
மறித்தசுர ரிந்திரன்விழச் சங்க மூதி
இரக்கமொடத் தருக்கொணர்ந்து மனைவிக் கீந்தாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (௬௬)

பயிர்க்கிறைத்துக் காலில்வருங் கிணற்று நீரைப்
பாகவதன் கைச்செம்பான் முகந்து கொண்டு
வெயிற்சுடுகால் குளிரவே நனைத்துக் கொள்ள
வேளாள னிறக்கவெம தூதர் பாசக்
கயிற்றினிற்கட் டொட்டாமன் முகுந்தா வுன்றன்
கணநாத ராதரவா யழைத்து வந்தே
இயற்சுருதி முழங்கியசீர் வைகுந் தத்தில்
இனத்தொடும்வைத் திடச்செய்தா யெம்பி ரானே

பாதகவெஞ் சினமுடைய கிராத கன்றன் [டே
பதியிழந்த விதவையைப்பெண் டாக்கிக் கொண்
பாதையினில் வீடுகட்டி யிருக்க வோர்நாள்
பாகவதர்க் கமுதளிக்கும் பொருட்டா லுச்சிப்
போதொரடி யவனவன்பந் தலிலே நின்று
போகவடி யார்க்குநிழ லீந்தா னென்றே
ஏதமற விவனேடுஞ் சாலோ கத்தில்
ஏற்றமுற வைத்தனையே யெம்பி ரானே. (௭௧)

அடவிதனி லரிதாச னெறியே செல்ல
அறியாமற் பறிக்கவந்தோர் கள்ளன் கிட்ட
படைவிற்கொண் டோர்வேடன் கூடி யத்தால்
பறியாக்கள் ளன்றொலைய வூர்போய்ச் சேர்ந்தே
திடமுற்ற பத்தியினு லுன்னைப் போற்றி
திருவாரா தனஞ்செய்ய வேட னாலே
இடரற்று னென்றவனை வைகுந் தத்தே
எண்ணமுற வைத்தனையே யெம்பி ரானே. (௭௨)

உன்னுமை மாயிரத்தி லொருபேர் சொல்லான்
உனதடியார்க் கொருநாளும் வணங்கிப் பேசான்
சொன்னாலும் பெரியோர்கள் புத்தி கேளான் [வான்
சொல்வ தெல்லாம் பொய்கொலையுங் களவுஞ்செய்
அந்நீசன் திருடிவந்தே திருவ ரங்கத்
தரிசியென்று விற்றதனு லவனுக் காவந்
தென்னாரின் பேர்சொன்னு னென்பேர் சொன்னன்
என்றுமுத்தி யளித்தனையே யெம்பி ரானே. ()

தாயாய்நற் றந்தையாய்க் குருவாய்த் தேவாய்த்
தாரமாய்ப் புத்திரரா யுறவாய் நானாய்
நீயாகி யெள்ளிலெண்ணெய் போலே யெங்கும்
நிறைந்துபரி பூரணமாய் நிற்குஞ் சோதி
மாயாகண் ணாவரதா வாசுதேவா
மாதவா வென்றுசுரர் வணங்கிப் போற்ற
ஏயாவென் றோயாமல் வேயால் வாயால்
இசையூத நின்றனையே யெம்பிரானே. (எச)

கன்றுடனே கோபால ரநேசம் பேரைக்
கமலவய னபகரித்துக் கொடுபோய் வைக்க
வென்றியுட னந்தந்த வடிவ மாகி
வேற்றுமையற் றனைத்துமுற வேசிட் டித்தாய்
அன்றிருந்து மற்றைநா ளயன்வந் தக்கால்
அனைத்துமுறக் கண்டஞ்சித் தெண்ட ன் பண்ணி
இன்றடியேன் செய்தபிழை பொறுத்துக் காவென்
றேத்தவளித் தனையரியே யெம்பி ரானே. (எரு)

பலவிசையச் சராசந்த னுன்றன் பேரிற்
படையெடுக்க முறிந்தோடிப் பின்பொ ருக்கால்
மலைமிசைநீ யேறத்தீ மூட்டி நீதான்
மடிந்தனையென் றெண்ணிமிகச் சயமா யுற்றால்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

அலேவின்றி நீயுதித்து மாறு பாகம்
ஆகவொரு தூரும்பினைத்தான் பிளந்தெ றிந்தே
இலகுபல முளவீம சேனன் கையால்
இருபிளவாக் கினையரியே யெம்பிரானே. (எசு)

நிருவாணத் துடன்குளித்துப் பனைகள் போல
நின்றமையாற் சுரர்கள்முனி சாபத் தாலே
மருதாகி நிற்குமிடத் துன்னை யாயர்
மதியாமல் வெண்ணெய்க்கா யுரலிற் கட்டில்
வெருவாம லேதவழ்ந்து மருதைக் கிட்டி
விறற்றிகிரி யாவுரலா லறுத்து வீழ்த்தி
இருளான சாபந்தீர்த் தவரைப் பண்டில்
ஏற்றமுற வைத்தனையே யெம்பி ரானே. (எஎ)

நிலமாது மோகித்தே யுனைக்குப் பெற்ற
நிருதநர காசுரனை யும்பர்க் காநீ
கொலவேண்டி வந்துபொர வவன் விடுத்த
கொடுங்கணைநின் னெற்றியிற்பட் டுதிரத் தாற்கண்
மலர்மூடிக் கொள்கையினின் கரத்தி லுற்ற
வரிசிலேயிற் சத்தியபா மைப்பெண் ணெய்ய
இலகாழி யெய்தாற்போ னரகன் மேற்பட்
டிறக்கவினைத தனையரியே யெம்பி ரானே. (எஅ)

சயமிகுத்த சாம்புவனைப் பொருது வென்றே
சாம்புவதிப் பெண்ணையுங்கைக் கொண்ட வந்நாள்
நயமுடனே சிமந்தகமா மணியுங் கொண்டே
நாடனைத்தும் போற்றவெழி லாக வந்தாய்
அயனையளித் துலகனைத்தும் படைக்கப் பண்ணும்
அச்சுதனே யென்றமர முனிவ ரெல்லாம்
இயலிசைசேர் வேதத்தாற் றுதிக்க வேவீற்
றிருக்குநா ராயணனே யெம்பி ரானே. (எகூ)

இட்டமுட னுயரில்லில் வெண்ணெய் நெய்பால்
  திருடுகைக்கே கண்டபெண்க ளுனைக் கயிற்றால்
கட்டிவைத்து நந்தன்மனை தன்னிற் சென்றே
  கைதொழுத சோதையுடன் முறையிட் டக்கால்
தொட்டிலிலே பார்க்கமிக்க கொறுக்கை விட்டே
  தூங்குதல்கண் டஞ்சியந்தப் பெண்க டெண்டன்
இட்டறியா தேசொன்னோம் பொறுமா தாவே
  என்றுரைக்கப் பண்ணினையே யெம்பி ரானே. ()

மகரத்திற் சூரியன்வந் துதித்த காலில்
  வந்திக்க விந்திரனை நோக்கிப் பொங்கல்
மிகவிட்டுக் கயிலையலை போமேல வைக்க
  விளையாட்டா யத்தனையும் நீயே யுண்ணக்
ககனத்தி லிந்திரனும் வந்து பார்த்துக்
  கன்மழையை நிரைமீதில் விடுத்த மட்டில்
இகபரத்துக் கிறையவனே நிரைக்காக் குன்றை
  எடுத்துமழை தடுத்தனையே யெம்பி ரானே. ()

தீமையினால் மக்கள்பழிக் காக்கண் ணில்லாத்
  திருதராட் டிரன்வீமற் கொல்ல வெண்ண
வீமனைப்போல் வல்லிரும்பாற் சமைப்பித் தந்த
  விழியிலான் முன்னிறுத்தி வீமன் பேச
மாமிடுக்காற் கைநெருக்க விருப்பு வீமன்
  வலியதலை தெறித்துயரப் பறக்க வேகண்
டேமமுடன் வீமனையாள் கண்ணா வென்றே
  எல்லோருந் தொழவிருந்தா யெம்பி ரானே. ()

உலகங்க ளீரேழுங் கற்பாந் தத்தில்
  ஒருங்கவே யோர்கணத்தி லெளிதா யுட்கொண்
டலைவின்றிக் கற்பாந்த வெள்ளந் தன்னில்
  ஆலிலைமேற் குழவியாய்த் துயின்ற வந்நாள்

சலிலமற மதுகயிட வரையுண் டாக்கிச்
சக்கரத்தாற் பிளந்துடலாற் சலத்தை மூடி
இலகமுனுண் டருளுலகை யுமிழ்ந்தே பண்டில்
ஏற்றமுற வைத்தனையே யெம்பி ரானே. (௮௩)

அருமறையா யிருக்கெசுர்சா மத்தி னோடும்
அதர்வணமா கியசதுர்வே தங்க டம்மைத்
திருடியெடுத் துக்கொண்டே யுததி சேரும்
தீயனுக்கா மச்சாவ தார மாய்நீ
ஒருசெலுவிற் சமுத்திரத்தைச் சுருக்கி யேவைத்
துக்கிரத்தாற் சோமுகா சுரனைக் கொன்றிட்
டிருளறவே விதிபடைக்க வவ்வே தத்தை
இரங்கியளித் தனையரியே யெம்பி ரானே. (௮௪)

மந்தரமத் தமிழ்ந்தாமற் பாற்க டற்குள்
வளர்ந்தாதி கூருமமாய் மலையைத் தாங்கிச்
சுந்தரவா சுகியைவட மாகச் சுற்றிச்
சுராசுரர்நின் றமிர்தங்க டைந்த வந்நாள்
ஐந்தருசிந் தாமணிநன் னிதிக ளொன்ப
தானைபரி மூதேவி தாரை தேனு
இந்திரைபொற் கௌத்துவமா மணியோ டாலம்
இளம்பிறையுந் தந்தனையே யெம்பி ரானே. (௮௫)

புண்ணியந்தெய் வதமுஞ்சேர் பூலோ கத்தைப்
புற்பாய்போற் சுருட்டிக்கொண் டேபா தாளம்
நண்ணிரணி யாட்சனைப்பின் றொடர்ந்தே யேகி
நலமுடனே யாதிவரா கத்தே வாகி
மண்ணுலக மனைத்துமிடந் தெடுத்தோர் கோட்டில்
வைத்துவர வன்மறிக்க வதைத்துத் தேவர்
எண்ணவுல கேழும் படியப் பண்ணாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (௮௬)

நலமருவு பிரகலாத னிரணி யாய
　நமவென்று சுக்கிரனன் ஹோதச் சொன்னால்
அலைவின்றி யரிகரிநா ராய ணவென்
　றறிந்துரைக்கப் பிதாசுதனைக் கொல்ல விட்ட
பலமல்லர் மதகரிபாம் பனல்நீர் வெற்பு
　படுபடைகண் மித்துருவாக் காக்கப் பண்ணி
இலகியபொற் றூணினர சிங்க மாய்வந்
　திரணியனை வதைத்தனையே யெம்பி ரானே. ()

சுரரசுசர் முனிவர்நரர் கையிற் பாரிற்
　சுடர்வானிற் பகலிரவி லுள்பு றம்பிற்
பெருபடையிற் ருன்சாகா விரண்யன் றன்னைப்
　பிரகலாதன் றற்கித்துண் டென்ற தூணில்
நரகரியாப் பொழுதுபுகு நேரந் தன்னில்
　நாடியுதித் துயர்வாசற் படிமீ தேறி
இரணியனைத் தொடைமிசைவைத் துகிரி னாலே
　இருபிளவாக் கினையரியே யெம்பி ரானே. (அஅ)

தீமையினால் மாவலிதான் வாழ்நா ளந்தத்
　தேவர்செயும் வேள்வியைத்தான் செய்கை யாலே
வாமனனாய் மூவடிமண் டாரை யேற்று
　வானிலயன் பூசிக்க வொருதா ணீட்டிப்
பூமியோ ரடியாக்கித் தாரை வார்த்து
　பூதானக் குறையடியுந் தந்து போவென்
றேமவுல கிற்சுகமாப் பாதா ளத்தில்
　எழிற்பலியைச் சிறையில்வைத்தா யெம்பி ரானே.

உலகளந்த போதுவளர்ந் தண்ட கோளத்
　துதைந்ததிரு வடியையயன் விளக்குந் தீர்த்தம்
பலமுகமா யாகாச கங்கை யாகிப்
　பகிரதன்மெய்த் தவத்தாற்பார்க் கிறங்கும்போதச்

சலமிகுந்தே யரன்சடையிற் றங்கி யந்தச்
 சங்கரனைச் சிவனாகி யிழிந்த தீர்த்தம்
இலகுபுகழ்க் காசியிலே கங்கை யாய்வந்
 திடர்தீர்க்கப் பண்ணினையே யெம்பி ரானே. (௯0)

தசரதன்பா லுதித்துமுனி யாக முற்றித்
 தாளினையாற் கல்லைப்பெண் ணாக்கி யார்க்கும்
வசமலாப் பினாகத்தைக் குனித் தொடித்து
 மனமகிழச் சீதையைநன் மணமுஞ் செய்து
குசலைபண்ணிக் கவித்திரளாற் சேது கட்டிக்
 கொடியரா வணகும்ப கருண னைக்கொன்
றிசைபெறவே வீட ணற்குப் பட்டங் கட்டி
 ஏற்றமுற வைத்தனையே யெம்பி ரானே. (௯௧)

வசுதேவன் சுதராறு பேரைக் கஞ்சன்
 வதைத்தபின்னே ழாங்கருவாய் வழுவி யேவீழ்ந்
தசரீரி யாலந்த நந்த கோபன்
 அடைக்கலமா முரோகிணியார் வயிற்றிற் புக்குச்
சசிவடிவாய்ச் சங்கரு ஷணனாய் வந்தே
 தக்கதிறற் கண்ணனுக்குத் தமைய னாகி
இசைவாக வலாயுதத்தா லுலகைக் காத்தாய்
 எழிற்பலபத் திரராமா வெம்பி ரானே. (௯௨)

வசுதேவ னிடத்துதித்து நந்த கோபன்
 மகவாகிச் சுரர்பணிந்து போற்ற வீறி
அசுரேச ரநேகருடன் கஞ்ச னைக்கொன்
 றைவருக்காப் பாரதப்போர் பொருது வென்று
சிசுபாலன் வசைகேட்டுப் பொருது சாபந்
 தீர்த்தருளிப் பரமபத மவனுக் கீந்தே
இசையாகத் திருவிளையாட் டநேகஞ் செய்தாய்
 ஏற்றமுள்ள கோவிந்தா வெம்பி ரானே. (௯௩)

நம்பியமெய்க் குருராமா நுசனைப்போற்றி
நலமுடனே கச்சியில்வாழ் கடாம்பி யாச்சான்
தும்பையூர்க் கொண்டியென்பா ணவபாண் டத்திற்
றோய்த்ததயிர் விலைபேசிக் கொண்டு வந்தே
உம்பர்தொழு முனக்கேத்தித் தானு முண்ண
உளத்திருள்போய்த் தயிர்க்குவிலை வாங்காக் கொ
கெம்பரமென் ஞச்சான்சொற் கேட்டு முத்தி [ண்டிக்
ஈந்திட்டா யச்சுதனே யெம்பிரானே. (கூச)

பாகவத கிருஷ்ணயங்கா ரென்பார் நின்பால்
பத்திகொடு சங்கீதம் லட்சம் பாட
நீகருணை கூர்ந்துதிருப் பதிநூற் றெட்டும்
நிமிடத்தி னேசமுடன் றோன்ற வைத்தாய்
மோகமுட னெடுத்தவனை விழுங்கிக் காட்டி
முடியிலவன் றரித்தபட்டும் வாயிற் காட்டி
ஏகமாய்க் கூடியது திட்டங் காட்டி
எல்லாரு மறியவைத்தா யெம்பி ரானே. (கூரு)

சக்கரஞ்சங் குயர்கதைவா டனுவோ டைந்தும்
தரித்தருளும் பரம்புருடா கமலக் கண்ணா
மிக்கபரா பரமூர்த்தி துளபத் தாமா
விறலுடனே மண்ணளந்துண் டிருக்குஞ் சோதி
அக்கரமைம் பத்தொன்றாய்ச் சொல்லாய்ச் சொல்லி
அருத்தமுமா யெட்டெழுத்தின் வடிவ மாகி [ன்
எக்கணிலு மனுவுக்கு மனுவாய் நின்றும்
எழிற்குருவா யுதிக்கின்றா யெம்பி ரானே. (கூசு)

திருமாதும் நிலமாதும் பத்தி யாலே
திருவடிகள் வருடியிட விழித்து றங்கும்
கருணாக ராமுத்தி வீடா யெங்கும்
கலந்துருவா யருவாகி யிருக்கு மாயா

அருளாளா வுயர்சனகன் சனக்கு மாரன்
அனந்தன்கரு டன்விசுவச் சேன னென்றும்
இருள்சேரா மார்க்கண்டன் பிருகு போற்ற
இருக்கின்றாய் நாரணனே யெம்பி ரானே. (கூஎ)

கண்ணிரண்டா யிரமுடைய சேஷன் பன்னாள்
காத்திருந்து முன்னுடைய வடிவங் காணான்
பண்ணுறத்தன் னாவிரண்டா யிரத்தா லோதிப்
படித்துமுன்றன் பெருமைதனைப் பகர மாட்டான்
மண்ணுலகிற் சிறியவனோர் நாவா லுன்றன் [னோர்
மகிமையைக்கண் டுரைக்கவென்றால் வசமோ வா
எண்ணரிய மாயவனே கச்சி வாழும்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (கூஅ)

பட்டமரந் தளிர்த்துமிகப் பூத்துக் காய்க்கப்
பாற்பசுக்கள் சுரந்தொழுக்க மலடு மீனத்
துட்டவியாக் கிரமுமா னினமு மொன்றாத்
தோகைமயில் படநாக முடனே யாட
வட்டமுலைக் கன்னியர்கள் மாலாய் நிற்க
வானவருந் தானவரும் வணங்கிப் போற்ற
இட்டமுட னேவேணு நாதம் பண்ணாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. (கூகூ)

ஆருமுனே நவமாகப் பாட வேதம்
ஆகமசாஸ் திரமனைத்தும் நீயு ரைத்தாய்
பேருமுனக் குண்டான பழைய பேரோ
பெருங்கதையு மியலிசையும் பழைய வேயாம்
காருததி நீர்தனையே முகந்து பெய்யிற்
கடலிலது நீத்தமதாய்க் கலந்துற் றாற்போல்
ஈரமுடன் மெய்யடியார் நவமாப் பாடில்
இரங்கியதுட் கொள்கின்றா யெம்பி ரானே. (க00)

## எம்பிரான்சதகம்.

திருநாம மறவாவுன் றாசர்க் கெல்லாம்
சீர்பாதத் தூளிநா யடியே னுன்றன்
அருளாலே யெம்பிரான் சதக மென்றே
அறைந்தகவி நூறதனி லொன்று னாலும்
பரிவாகக் கற்றவர்க்குங் கேட்ட பேர்க்கும்
படிமிசையிற் றுன்பமறுத் தின்பம் பாலித்
திருவடியின் மெங்ஞ்ஞானம் விளங்கச் செய்வாய்
இறைவநா ராயணனே யெம்பி ரானே. (௧0௧)

எம்பிரான்சதகம்

முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.

# புத்தகவிளம்பரம்

| | R. | A. | P. |
|---|---|---|---|
| சடகோபரந்தாதி ... ... ... | 0 | 0 | 9 |
| திருவேங்கடக்கலம்பகம் ... ... ... | 0 | 1 | 6 |
| திருக்கண்ணமங்கைமாலை ... ... .. | 0 | 0 | 9 |
| கஜேந்திரமோக்ஷம் ... ... ... ... | 0 | 0 | 9 |
| எம்பிரான்சதகம் ... ... ... | 0 | 1 | 0 |
| கோவிந்தசதகம் ... .. .. ... | 0 | 0 | 9 |
| ‡ திருரங்கத்தாசற்றிருநாமம் ... | 0 | 0 | 9 |
| ‡ திருவரங்கக்கலம்பகம் ... .. ... | 0 | 1 | 3 |
| ‡ திருவரங்கத்துமாலை .. .. .. | 0 | 0 | 9 |
| ‡ திருவரங்கத்தந்தாதி ... .. .. | 0 | 0 | 9 |
| ‡ திருவேங்கடமாலை .. ... ... | 0 | 0 | 9 |
| ‡ திருவேங்கடத்தந்தாதி ... ... ... | 0 | 0 | 9 |
| ‡ நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி ... ... | 0 | 0 | 9 |
| ‡ அழகரந்தாதி ... ... ... ... | 0 | 0 | 9 |
| ஷை சடகோபரந்தாதி முதலாகிய 14 - புத்தகங்களும் ஒன்றாகக்கட்டியது. | 0 | 10 | 0 |
| ஷை 14 - புத்தகங்களுள் இக் ‡ குறியிடப்பட்ட புத்தகங்கள் திவ்யகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அஷ்டப்பிரபந்தங்கள் இவை ஐயங்கார் சரித்திரத்துடன் ஒன்றாகக்கட்டியது. | 0 | 6 | 0 |
| ஸ்ரீவிஷ்ணுபுராண வசனம் கித்தான் பவுண்டு | 1 | 14 | 0 |
| ஷை ஷை ஆப்பவுண்டு. | 1 | 12 | 0 |
| நாலாயிரப்பிரபந்தம் .. ... ... | 1 | 8 | 0 |
| குசேலவர் கீர்த்தனை ... ... ... ... | 0 | 8 | 0 |
| விஷ்ணுதூஷணபரிகாரம் ... ... ... | 0 | 2 | 0 |
| கண்ணிநுண்சிறுத்தாம்பு தெலுகு ... ... | 0 | 6 | 0 |
| ஷை ஷை தமிழ் .. | 0 | 6 | 0 |
| குருபரம்பரைப் பிரபாவம் (தெலுகுவசனம்.) | 1 | 0 | 0 |
| இராமநுஜ நூற்றந்தாதி (தெலுகு) கித்தான் பவுண்டு. | 0 | 8 | 0 |
| ஷை ஷை ஆப்பவுண்டு ... | 0 | 6 | 0 |

மகாமகோபாத்யாய, ...
உ. வே. சாமிநாதையர் நூ... ...யம்
அடையாறு, சென்னை-20